# சிலப்பதிகாரத்தில் சாபம் ஒரு தண்டனை முறை

திருமதி வீ.வெள்ளைத்துரைச்சி, உதவிப்பேராசிரியர்,
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி,சிவகாசி.
vellaithuraichi-tam@sfrcollege.edu.in - 7639770943.

DOI 10.5281/zenodo.10656495

**Abstract :**

Literature is a mirror of time. We get to know the life of the people through those literatures. The life of ancient people can be known through ancient literature. The life of the people of ancient times can be divided into two categories as internal life and external life. Internal life refers to family life and external life refers to war life. There is a curse in both lives. Cursing is a type of punishment in some rituals.

Key Words : Kappiyam - Literature - Tamil ancient story

## முன்னுரை

இலக்கியங்கள் காலத்தைக் காட்டும் கண்ணாடி. அவ்இலக்கியங்களின் வழி மக்களின் வாழ்வியலை நாம் அறிந்து கொள்கின்றோம். பண்டைய கால மக்களின் வாழ்வியலை பண்டைய இலக்கியங்களின் வழி அறிந்துகொள்ள முடிகின்றது. பண்டைய கால மக்களின் வாழ்வியலை அகவாழ்வு, புறவாழ்வு என இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அகவாழ்வு என்பது குடும்ப வாழ்க்கையையும், புறவாழ்வு என்பது போர்வாழ்க்கையையும் குறிக்கிறது. இரு வாழ்க்கையிலும் சாபம் என்பது உண்டு. சிலப்பதிகாரத்தில் சாபம் என்பது ஒரு வகைத் தண்டனை முறை எனலாம். இதனை நிறுவுவதாக இவ்ஆய்வுக்கட்டுரை அமைகின்றது.

## சாபம்

சாபம் என்னும் சொல்லுக்கு "குட்டி, சபிப்பு, தனுவிராசி, வட்டத்திற்பாதி, வில், தவத்தோர் கோபமொழி"[1] என்று பலப் பொருள்களை மதுரைத் தமிழ்ப் பேரகராதி அளிக்கின்றது. இதில் தவத்தோர் கோபமொழி என்பது கருதத்தக்கதாகும். தவத்தோரும், இயல்பில் பிறருக்குத் தீமை நினையாதோரும் வெளிப்படுத்தும் சொற்களுக்கு மிகுந்த வலிமையுண்டு. 'சாது மிரண்டால் காடு தாங்காது' எனும் முதுமொழியும் உணர்த்துகின்றது எனலாம். சாதுக்கள் அமைதியானவர்கள் இவர்தம் கோபமொழிகளுக்கு உண்மையாகும் ஆற்றல் உண்டு.

இவர்கள் தவத்தால் கடவுளுக்குரிய எண்ணங்களான "பற்றுகளில் இருந்து நீங்குதல், இயற்கை உணர்வினாதல், தன் வயத்தனாதல், தூய மெய்யினராதல், பெரிய

அருளுடைமையராதல், முடிவில்லா ஆற்றலை உடைமை, முற்றும் உணர்தல் எல்லையற்ற இன்பமுடையவராதல்"[2] என்னும் பேறு பெற்றவர்கள் என்பர்.

தவசிகள், கற்புடைய பெண்கள், தெய்வப் பெண்கள், பிற உயிர்களுக்குத் தீங்கு (மனம், வாக்கு, மெய் என்னும் மூன்றால்) செய்யாதவர்கள் போன்றோர்கள் சொல்லும் சொல்லுக்கு வலிமையுண்டு. அச்சொல் நன்மையாகவும், தீமையாகவும் ஒருவரின் வினைக்கு ஏற்ப அமைவதாகக் கருதப்படுகின்றது.

அவ்வகையில் சாபங்கள் "பெண் சாபம், பிரேத சாபம், பிரம்ம சாபம், சர்ப்ப சாபம், பித்ரு சாபம், கோ-சாபம், பூமி சாபம்,கங்கா சாபம், விருட்ச சாபம், தேவ சாபம், ரிஷி சாபம், முனி சாபம், குல தெய்வ சாபம்"[3] என்று பதின்மூன்றாகச் சொல்லப்படுகின்றது.

**சிலம்பில் சாபம்**

சிலப்பதிகாரத்தில் சாபம் மற்றும் சாபவிடை குறித்த பதிவுகளை நான்கு இடங்களில் காணமுடிகின்றது. இதில் அரங்கேற்றுகாதையும், கடலாடுகாதையும் தரும் சாபம் குறித்த செய்திகள் இந்திரனின் மகன் சயந்தன் மற்றும் ஊர்வசி (மாதவியின் முன் தோன்றல்) பற்றியதாகவும், நாடுகாண் காதையும், கட்டுரைக் காதையும் குறிக்கும் சாபச் செய்திகள் வம்பப்பரத்தையும், வறுமொழியாளனும் மற்றும் கண்ணகியின் கணவன் முற்பிறப்பில் பெற்ற சாபச் செய்தி குறித்த பதிவாகவும் இடம்பெற்றுள்ளன.

**ஊர்வசி - சயந்தன்**

அகத்திய முனிவரின் சாபத்தால் பூமியில் இந்திரனின் மகன் சயந்தன் மூங்கிலாகவும், இந்திரசபை நடனமாது ஊர்வசி (உருப்பசி) பெண்ணாகவும் பிறந்தனர். இதை "ஒரு காலத்து அகத்தியர் இந்திரன் சபைக்குச் செல்ல, இந்திரன் உருப்பசியை நடனஞ்செய்ய ஏவினான். இவள் சித்திரசேநன் யாழ் அமைப்ப நடனஞ்செய்பவள். சயந்தனிடம் வைத்த காதலால் இசை பிறழ நடித்து இந்திரனையும் சபையிலுள்ளோரையும் களிப்பித்திலள். அதனால் சயந்தனையும், உருப்பசியையும் பூமியில் பிறக்கச்சபித்தவர்"[4] என்று அபிதான சிந்தாமணி கூறுவதனாலும் அறியமுடிகின்றது.

இச்செய்திகளை இந்திரவிழாவைக் காண்பதற்காகத் தன் காதலியுடன் வரும் விஞ்சைவீரனின் கூற்றாக இளங்கோவடிகள் பதிவுசெய்துள்ளார். இதனை,

"வெள்ளி மால்வரை வியன்பெருஞ் சேடிக்
கள்ளவிழ் பூம்பொழிற் காமக் கடவுட்குக்
கருங்கயல் நெடுங்கண் காதலி தன்னொடு

விருந்தாட் டயருமோர் விஞ்சை வீரன்"

(சிலம்பு.கா.6 : 1-4)

என்ற பாடலடிகளும், மேலும்

"ஆயிரங் கண்ணோன் செவியகம் நிறைய
நாடகம் உருப்பசி நல்காளாகி
மங்கலம் இழப்ப வீணை மண்மிசைத்
தங்குக இவளெனச் சாபம் பெற்ற
மங்கை மாதவி வழிமுதல் தோன்றிய"

(சிலம்பு.கா.6 : 20-24)

என்ற பாடலடிகளும், மேலும்

"இந்திர சிறுவன் சயந்த னாகென
வந்தனை செய்து வழிபடு தலைக்கோல்"

(சிலம்பு.கா.3 : 119-120)

என்ற பாடலடிகளும் எடுத்தியம்புகின்றன. இதில் சாபம் பெற்றுப் பூமிக்கு வந்துப் பெண்ணாகப் பிறந்த ஊர்வசியின் மரபு வழியில் வந்தவள் மாதவி என்பது பெறப்படுகின்றது. மேலும் அகத்தியரின் சாபத்தால் சயந்தன் பொதியமலையில் மூங்கிலாகத் தோன்றினான் என்னும் கூற்றையும், அவனையே தலைக்கோலாக நாட்டிய அரங்கில் வைத்து வழிபட்ட தன்மையையும் அறியமுடிகின்றது.

இதனைச் "சயந்தன் அகத்தியர் சாபத்தால் மூங்கிலாய்ப் பிறந்து தலைக்கோல் தானத்துச் சாபம் நீங்கினான். ஆகலின் தலைக்கோலைச் சயந்தனாக நினைத்து"[5] என்னும் ந.மு.வேங்கடசாமி நாட்டாரின் உரைக்குறிப்பாலும் பெறமுடிகின்றது.

"சயந்தன் மூங்கிலாய்ச் சாபம் பெற்று வளர்ந்தது விந்தைமலை"[6] (விந்தியமலை) என்று சயந்தன் பற்றிய குறிப்புரையில் அபிதான சிந்தாமணி குறிப்பிடுகின்றது. இதனால் சயந்தன் அகத்தியரின் சாபம் பெற்று மூங்கிலாய் வளர்ந்தது. பொதியமலையிலா அல்லது விந்திய மலையிலா என்னும் மாறுபட்ட கருத்து இருப்பதையும் காணமுடிகின்றது. தேவலோகப் பெண் மானிடமாகப் பிறந்து பல இன்னல்களை அடைவதும், சயந்தன் மூங்கிலாய்ப் பிறந்து பல இன்னல்களை அடைவதன் வாயிலாக சாபம் தண்டனை என்பதனை அறியலாம்.

**வம்பப்பரத்தை - வறுமொழியாளன்**

மதுரையை நோக்கிப் பயணம் மேற்கொண்ட கோவலன், கண்ணகி ஆகிய இருவருக்கும் வழித்துணையாக கவுந்தியடிகள் எனும் சமணத்துறவி செல்கின்றார். அப்பொழுது அவர்கள் செல்லும் வழியில் ஒரு வம்பப்பரத்தையும் வறுமொழியாளனும் கோவலன், கண்ணகியை உடன்பிறந்தவர்கள் என்றும், இவர்கள் கணவன் மனைவியாக வாழ்தல் சரியா என

கவுந்தியடிகளிடம் கேட்டனர். இதனைக் கேட்ட கண்ணகி மிகுந்த துன்பம் கொண்டு தன் காதுகளை பொத்திக் கொண்டு கோவலன் முன் நின்றாள். இதனைக் கண்ட கவுந்தியடிகள் கோபம் கொண்டு வம்பப்பரத்தையும், வறுமொழியாளனையும் முட்கள் நிறைந்த காட்டில் வயோதிகத் தன்மையுடைய நரிகளாவீர் என சாபம் விடுகின்றார். இதனை,

“உடன்வயிற்றோர்கள் ஒருங்குடன் வாழ்க்கை
கடவதும் உண்டோ கற்றறிந் தீரெனத்
தீமொழி கேட்டுச் செவியகம் புதைத்துக்
காதலன் முன்னர்க் கண்ணகி நடுங்க
எள்ளுலீந் போலுமிவர் என்பூங் கோதையை
முள்ளுடைக் காட்டின் முதுநரி யாகெனக்
கவுந்தி இட்ட தவம் தரு சாபம்”

(சிலம்பு.கா.10 : 227-233)

என்ற பாடலடிகள் விளக்குகின்றன.

கவுந்தியடிகளின் சாபத்தால் நரியாகிப் போன பரத்தைக்கும், காமுகனுக்கும் உய்திக் காலத்தை அருள்கொண்டு சொல்ல வேண்டும் என்ற கோவலனும், கண்ணகியும் வேண்ட, ‘உறையூர் காவற்காட்டில் பன்னிரண்டு மாதங்கள் மிகுதுன்பங்களைப் பெற்று வருந்திப் பின்பு முன்னை உருவம் பெறுவர்’ என்று அவர்களுக்குச் சாபவிடையைக் கவுந்தியடிகள் தருகின்றார். இதனை,

“நறுமலர்க் கோதையும் நம்பியும் நடுங்கி
நெறியின் நீங்கியோர் நீரல கூறினும்
அறியாமை யென்றறியல் வேண்டும்
........................................
உறையூர் நொச்சி யொருபுடை யொதுங்கிப்
பன்னிரு மதியம் படர்நோ யுழந்தபின்
முன்னை யுருவம் பெறுகவீங் கிவரென”

(சிலம்பு.கா.10 : 236:244)

என்னும் பாடலடிகள் புலப்படுத்துகின்றன. இதில் தவசியாகிய கவுந்தியின் சாபமும் பரத்தை, வீண்மொழியாளனின் சாபவிடையையும் அறியமுடிகின்றது. இதன் வழியாக சாபம் ஒரு தண்டனையாகத் தரப்பட்டதை அறியஇயலுகின்றது.

**கோவலன் பெற்ற சாபம்**

மதுராபதி தெய்வம், கண்ணகியிடம் நீ இன்று இவ்வாறு துன்பப்படுவதற்குள் காரணம், முற்பிறப்பில் கோவலன் செய்த செயலேயாகும். கபிலபுரத்தை ஆண்ட வசு என்பவருக்கும்,

சிங்கபுரத்தை ஆண்ட குமரன் என்பவருக்கும் போர் நடந்தவண்ணம் இருக்கும். அவர்களின் நாடுகள் செல்வவளம் மிக்கது. அப்பொழுது சங்கமன் - நீலி என்ற தம்பதியினர்கபிலபுரத்தில் வாழ்ந்து வாழ்ந்தனர். சங்கமன் மிகுந்த செல்வம் ஈட்டும் பொருட்டு தன் மனைவியுடன் சிங்கபுரத்தை அடைகின்றான். அவன் கொண்டு வந்த அணிகலன்களை விற்றுப் பொருளைப் பெற முயற்சி செய்து கொண்டிருக்கையில் முற்பிறப்பில் பரதன் என்னும் பெயருடன் இருந்த கோவலன் சங்கமனைப் பகைநாட்டு ஒற்றன் என அந்நாட்டு மன்னனிடம் கூறுகின்றான். பிறகு மன்னனின் ஆணைப்படி சங்கமனுக்கு கொலைத் தண்டனை விதிக்கப்பட்டு அதனை கோவலன் நிறைவேற்றுகின்றான். இதனை அறிந்த சங்கமனின் மனைவி நீலி துடித்தாள். பல இடங்களுக்கும் சென்று நீதி கேட்டு அழுகின்றாள். இவ்வாறு நாட்கள் கழிந்த பின் கணவன் இறந்த பதினான்காம் நாள் மலை உச்சியில் நின்று தன்னுடைய இந்நிலைக்குக் காரணமானவர்கள் என்னைப் போலவே துன்பம் அடைந்து மடிவார்கள் என்று சபிக்கின்றாள்.

இதன் காரணமாகவே கோவலனாகிய உன் கணவன் முற்பிறப்பில் செய்த பாவ வினைக்கான சாபத்துன்பத்தினை இப்பிறவியில் நீயும் நின் கணவனும் அடைந்தீர்கள் என மதுராபதித் தெய்வம் கூறுகின்றது. இதனை,

“சங்கமன் என்னும் வணிகன் தன்னை
முந்தைப் பிறப்பில் பைந்தொடி கணவன்
வெந்திறல் வேந்தற்குக் கோத்தொழில் செய்வோன்
பரதன் என்னும் பெயரெனக் கோவலன்
விரதம் நீங்கிய வெறுப்பினன் ஆதலின்
ஒற்றன் இவன்எனப் பற்றினன் கொண்டு
வெற்றிவேல் மன்னர்க்குக் காட்டிக் கொல்வுழிக்
கொலைக் களப்பட்ட சங்கமன் மனைவி
நிலைக்களம் காணாள் நீலி என்போள்
அரசர் முறையோ பரதர் முறையோ
ஊரீர் முறையோ சேரியீர் முறையோ என
மன்றிலும் மறுகிலும் சென்றனள் பூசலிட்டு
ஏழுநாள் இரட்டி எல்லை சென்றபின்
தொழுநாள் இதுஎனத் தோன்ற வாழ்த்தி
மலைத்தலை ஏறிஓர் மால்விசும்பு ஏணியில்
கொலைத்தலை மகனைக் கடுபு நின்றோள்
எம்முறு துயரம் செய்தோர் யாவதும்
தம்உறு துயரம் இற்றாகுக என்றே
விழுவோள் இட்ட வழுவில் சாபம்

பட்டனிர்........................"

(சிலம்பு.கா.23 : 151-170)

என்ற பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. கோவலன் முற்பிறப்பில் செய்த குற்றத்திற்கு மறுபிறவியில் தண்டனை அனுபவிக்கச் செய்யும் சாபம் ஒரு வகைத் தண்டனை முறை என்பதை அறியலாம்.

**முடிவுரை**

சிலப்பதிகாரத்தில் பல நிகழ்வுகள் வழியாக சாபம் என்பதும் ஒரு வகைத் தண்டனை முறை என்பதை அறியமுடிகின்றது. இன்றும் சாபம் என்பது ஒரு வகைத் தண்டனை முறையாகவே கருதப்படுகின்றது. ஆனால் அத்தண்டனை கிடைக்குமா கிடைக்காதா என்பதை நாம் முழுமையாக சொல்ல இயவில்லை.

**சான்றெண் விளக்கம்**

1. சந்தியா நடராஜன் (ப.ஆ), மதுரைத் தமிழ்ப் பேரகராதி, ப.884.
2. மேலது, ப.46.
3. செம்புலம், பன்னாட்டுத் தமிழாராய்ச்சிக் காலாண்டிதழ், பக்.74-75.
4. ஆ.சிங்காரவேலு முதலியார், அபிதான சிந்தாமணி, ப.4.
5. ந.மு.வேங்கடசாமி நாட்டார், சிலப்பதிகாரம் மூலமும் உரையும், ப.111.
6. ஆ.சிங்காரவேலு முதலியார், மேலது, ப.717.